1974 சனவரி 24]

## மேல்ப்பாளையம் நகரமன்றக் கூட்டம்

*143 வினா—திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மேலப்பாளையம் நகரமன்றம் கடந்த 1971, 1972 இரண்டு வருடங்களில் எத்தனை முறை மன்றக் கூட்டங்களை நடத்தியுள்ளது?

(இ) கடைசியாக நடைபெற்ற கூட்டம் எப்போது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:

(அ) 1971-ல் 13.
1972-ல் 12.

(இ) கடைசியாக நடைபெற்ற கூட்டம் 31—5—1973.

திரு. க. உரொ. எட்மண்ட் : 1973-ல் 13 கூட்டங்களும், 72-ல் 12 கூட்டங்களும் என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிற நேரத்தில் கூறினார்கள். இதில் எவ்வளவு சாதாரண கூட்டங்கள்? எவ்வளவு அவசரக் கூட்டங்கள் என்பதைச் சொல்வார்களா? நான் இதை எதற்காகக் கேட்கிறேன் என்றால் சென்னை முனிசிபல் சட்டப் பிரகாரம் ஒவ்வொரு நகரசபையும் மாதத்திற்கு ஒரு சாதாரணக் கூட்டம் எப்படியும் நடத்தியாக வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. மேல்ப்பாளையம் நகரமன்றத்தைப் பொறுத்து அங்கு பல மாதங்கள் தொடர்ந்து சாதாரணக் கூட்டங்களே நடத்தாமல் இருக்கிறார்கள். ஆகவே அந்த விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 1973-ல் என்று சொல்லவில்லை. 1971-72-ல். அதன் விவரம் தற்போது என்னிடம் இல்லை. நகர மன்றத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்கும் பொருட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.